**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.168** **நாள் : 01.10.2024**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து மண்டலக் கண்காணிப்பு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள மண்டலக் கண்காணிப்பு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (01.10.2024) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

வடகிழக்குப் பருவமழையினையொட்டி, மழைநீர் தேங்கும் பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள தாழ்வான பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை தனிக்கவனம் செலுத்தி கண்காணித்திட வேண்டும். மழை நேரத்தில் மக்கள் தங்குவதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள நிவாரண முகாம்கள் மற்றும் அதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். இதில் மின்வசதி, குடிநீர் வசதி, ஜெனரேட்டர் வசதி இருப்பதை உறுதி செய்திட வேண்டும்.

மையப்படுத்தப்பட்ட சமையல் கூடங்கள், அனைத்து அம்மா உணவகங்கள் என மக்களுக்குத் தேவையான உணவினை சமைத்து வழங்குகின்ற வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, மக்களுக்கு உணவை வழங்குவதற்காக உரிய வாகனங்கள் தயார்நிலையில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். அனைவருக்கும் மழைக்கால முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் குறித்தும், தகவல் தொடர்பிற்காகவும், கையடக்கக் கணினிகள் உரிய மென்பொருள் வசதிகளுடன் அனைத்து கண்காணிப்பு அலுவலர்களுக்கும் வழங்கப்படும். மேலும், அனைத்து கண்காணிப்பு அலுவலர்களுக்கும் வாக்கி டாக்கிகள் பயன்பாட்டிற்காக வழங்கப்படும். அனைத்து மண்டல அலுவலகங்களிலும் தடையற்ற மின்வசதிக்காக ஜெனரேட்டர்களை தயார்நிலையில் வைத்திட வேண்டும். கால்வாய்களில் தண்ணீர் வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை கண்காணித்து தங்குதடையின்றி வெளியேற்றிடவும், மக்கள் பாதிக்காதவாறு அவர்களுக்கு தேவையான உணவு வழங்குதல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்திட வேண்டும்.

பேரிடர் கால மேலாண்மை செயல்பாடுகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை பெருநகர சென்னை மாநகராட்சி,

நீர்வளத்துறை, மின்துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட சேவைத்துறைகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். தேவையான இயந்திரங்கள், மோட்டார் பம்புகள் உள்ளிட்ட வெள்ள மீட்பு நடவடிக்கைகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் இருப்பதை உறுதி செய்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மண்டலக் கண்காணிப்பு அலுவலர்கள் திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப., திரு.ஏ.சிவஞானம், இ.ஆ.ப., திருமதி பி. உமா மகேஷ்வரி, இ.ஆ.ப., திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., டாக்டர் எஸ். விசாகன், இ.ஆ.ப., திரு. பி. கணேசன், இ.ஆ.ப., திரு.எம். பிரதாப், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்) மற்றும் தலைமைப் பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**